ஜாஎல நகர சபை - 2024
----

1. நிதிக் கூற்றுக்கள்

1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

ஜாஎல நகர சபையின் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயற்பாட்டுக் கூற்று, தேறிய சொத்துக்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று, முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2024 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் நகர சபை கட்டளைச் சட்டத்தின் (அதிகாரம் 255) பிரிவு 181(1) மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10(1) உபபிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிச குடியரசு அரசியலமைப்பின் 154(1) உறுப்புரையில் உள்ளடக்கிய ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களினைத் தவிர்த்து, ஜாஎல நகர சபையின் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி.) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள், இந்த அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நகர சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.
2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் நகர சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு தனது அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

1.4 கணக்காய்வின் விடயப்பரப்பு (நிதிக் கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு)

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பிண்ணணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும், போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிராயத்திற்கு அடிப்படையாகும். தவறு ஒன்றின் மூலம் ஏற்படும் தாக்கங்களை விட மோசடி ஒன்றின் மூலம்இடம்பெறும் பொருண்மையான பிறழ் கூற்றினை இணங்காணாமையால் எழும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன், தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி சபையின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன என மதிப்பீடு செய்தல்.

வேண்டப்பட்டவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- நகர சபையின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய

முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- உரிய எழுத்துமூல சட்டத்திற்கு அல்லது நகர சபையினால் வழங்கப்பட்ட ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் நகர சபை இணங்கியிருந்ததா என்பதும்,

- தனது அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

- வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் பின்வரும் தேவைப்பாடுகள் தொடர்பாக விஷேட ஏற்பாடுகள் அடங்கியுள்ளன.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6(1)(ஈ)(iii) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடின் படி, நகர சபையின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்குகின்றன.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6(1)(ஈ)(iv) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடின் படி, முன்னைய ஆண்டின் போது என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்களில் அடங்கியுள்ளன.

1.6 நிதிக் கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

1.6.1 உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணக்கமின்மை

	உரிய நியமங்களுடன் தொடர்புடன் இணக்கமின்மை	சபையின் கருத்துரை	பரிந்துரை
(அ)	நியமத்தின் 2 ஆம் அத்தியாயத்தின் பந்தி 2.5 இன் படி நிதிக் கூற்றுக்கள் அட்டுறு அடிப்படையில் தயாரிக்கப்பட வேண்டியிருந்த போதிலும், முன்னைய ஆண்டிற்காக மீளாய்வாண்டின் போது கிடைத்திருந்த முத்திரைக் கட்டண வருமானம் ரூபா 52,013,639 தொகை மீளாய்வாண்டின் வருமானம் என கணித்து கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.	எதிர்காலத்தில் அட்டுறு அடிப்படையில் கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என.	அட்டுறு அடிப்படையில் கணக்கீடு செய்தல் மேற்கொள்ளப்பட வேண்டும்.
(ஆ)	நியமத்தின் அத்தியாயம் 3 பந்தி 3.6 இற்கு இணங்க காசுப்பாய்ச்சில் கூற்றில் முன்னைய ஆண்டிற்கான ஒப்பீட்டு ரீதியான மீதிகளுக்கு பதிலாக 2022 ஆண்டின் மீதிகள் பதிவு செய்யப்பட்டிருந்தது.	சரிசெய்யப்பட்ட காசுப்பாய்ச்சல் கூற்று இத்துடன் சமர்ப்பிக்கப்படுகின்றது என.	நியமத்தின் படி ஒப்பீட்டு ரீதியான மீதிகளை காட்டுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

1.6.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	சபையின் கருத்துரை	பரிந்துரை
(அ)	மீளாய்வாண்டு படலைகள் பொறுத்துவதற்காக மேற்கொள்ளப்பட்டிருந்த ரூபா 1,482,020 இற்கான செலவு கட்டிடங்கள் மற்றும் பொருத்துக்களின் கீழ் கணக்கீடு செய்யப்பட வேண்டியிருந்த போதிலும் காணிகள் கணக்கிற்கு மூலதனப்படுத்தப்பட்டிருந்தது.	2025 ஆண்டு பொருத்துதல் கணக்கிற்கு வரவு மற்றும் காணிக் கணக்கிற்கு செலவு என ரூபா 1,482,020 இற்கான தொகையொன்று கணக்கீடு செய்யப்பட்டது என.	சரியாக கணக்கீடு செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும்.
(ஆ)	நகர சபை அலுவலக வளாகத்தில் வாகனச் செயற்களத்திற்கு முன்பக்கத்தில் முற்றத்தை காபட் பண்ணுவதற்காக மேற்கொள்ளப்பட்டிருந்த ரூபா 2,233,472 இற்கான செலவு நடைமுறை வேலை காணிகளின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.	2025 ஆண்டிற்கான கணக்குகள் தயாரிக்கும் போது சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என.	சரியாக கணக்கீடு செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும்.

1.6.3 இணக்கஞ் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள் மற்றும் அறிக்கைகள்

கணக்காய்வு அவதானிப்புக்கள்	சபையின் கருத்துரை	பரிந்துரை
மீளாய்வாண்டின் நிதிக்கூற்றுக்களில் அடங்கியுள்ள 04 கணக்கு மீதிகள் நிதிக்கூற்றுக்களின் படி மீதி மற்றும் அட்டவணையின் படி மீதிகளின் இடையே ரூபா 7,532,408 இற்கான இணக்கமின்மை அவதானிக்கப்பட்டது.	இதற்கான காரணமான நாட்குறிப்பு பதிவின் மூலம் பரீட்சை மீதியில் சீராக்குவதற்கு முடியாமல் போனது என.	அட்டவணைகள் நாளதுவரையாக பேணப்பட்டு அதன் அடிப்படையில் கணக்குகள் சரி செய்யப்பட வேண்டும்.

1.7 இணக்கமின்மை

1.7.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை சந்தர்ப்பங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

	சட்டங்கள் விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு	இணங்காமைகள்	சபையின் கருத்துரை	பரிந்துரை
(அ)	நகர சபை நிதி நிருவாகத்திற்குரிய கணக்கு அலுவல்கள் தொடர்பான விதி 333	ஏற்றுக்கொள்ளத்தக்க காரணமொன்றி டென்டர் விடயங்களுக்காக டென்டர் குழு அல்லது மதிப்பாய்வுக் குழுவொன்றின் அங்கத்தவர்கள் தொடர்ந்து 3 கூட்டங்களுக்கு பங்குபற்றாத உத்தியோகத்தர் தொடர்பாக அந்த ஏற்பாடுகளின் பிரகாரம்	சபைக்கு மற்றும் உள்ளூராட்சி ஆணையாளருக்கு அறிவிப்பதற்கு எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும் என.	நிதி நிருவாகத்திற்குரிய கணக்கு அலுவல்கள் தொடர்பான விதியின் படி செயற்பட வேண்டும்.

		நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.		
(ஆ)	இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணம்			
i.	189	ரூபா 71,608 தொகைக்கான வீதவரி செலுத்துவதற்காக வழங்கப்பட்டிருந்த மதிப்பளிக்கப்படாத 04 காசோலைகள் தொடர்பாக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.	மதிப்பளிக்கப்படாத காசோலைகளின் உரிமையாளர்களுக் கு அறிவுருத்தப்பட்டது என.	நிதிப் பிரமாணங்களின் படி செயற்பட வேண்டும்.
ii.	571	02 வருடங்களை மிகைத்துள்ள 04 வகையான 118 வைப்புக்களை ஆதனவழிப்புச் செய்யப்பட்டிருக்கவில்லை.	2025 ஆண்டில் வைப்புக்களை ஆதனவழிப்பு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என.	நிதிப் பிரமாணங்களின் படி செயற்பட வேண்டும்.
(இ)	பொது நிருவாகச் சுற்றறிக்கைகள்			
	2016 திசெம்பர் 29 ஆந் திகதிய 30/2016 இலக்கங் கொண்ட பொது நிருவாக சுற்றறிக்கையின் பந்தி 3.1	வாகனங்களின் சம்பவக் குறிப்பேடு தொடர்பாக தெரிவுக் கணக்காய்வு பரிசோதனையின் போது சபைக்குச் சொந்தமான 26 வாகனங்களுக்காக எரிபொருள் எரிவுப் பரிசோதனை 5 வருடங்களுக்கும் 10 இற்கும் இடைப்பட்ட காலம் முதல் மேற்கொள்ளப்பட்டிருக்கவில் லை.	தற்போது மைலோ மீற்றர் செயற்படுகின்ற வாகனங்களுக்காக எரிபொருள் எரிவுப் பரிசோதனை மேற்கொள்ள ஆரம்பிக்கப்பட்டுள்ள து என.	சுற்றறிக்கையின் படி செயற்பட வேண்டும்.
(ஈ)	நகர சபைக் கட்டளைச் சட்டத்தின் பிரிவுகள் 153 மற்றும் 157(II)	பொ்து மற்றும் தனிப்பட்ட சந்தைகள் மற்றும் சந்தைகளை பராமறித்தல், கட்டணம் அறவீடு செய்தல், ஒதுக்கி கொடுப்பதற்காக துணை விதிகள் ஆக்கப்பட வேண்டியிருந்த போதிலும் சபைக்கு சொந்தமான கடையறைகளை குத்தகைக்கு கொடுத்தலை முறைப்படுத்தல் மற்றும் ஒழுங்குறுத்துவதற்காக துணை விதிகள் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.	கடையறைகளை வாடகைக்கு கொடுத்தலை முறைப்படுத்தல் மற்றும் ஒழுங்குறுத்துவதற்கா க துணை விதிகள் தயாரிப்பதற்காக விரைவாக நடவடிக்கை எடுக்கப்படும் என.	துணை விதிகள் தயாரிக்கப்பட்டு சபையின் அலுவல்களை முறைப்படுத்த வேண்டும்.

2. நிதி மீளாய்வு

2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் படி 2024 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான செலவுகளை மிகைத்த வருமானம் ரூபா 31,596,151 தொகை காணப்பட்டதுடன், அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் செலவை மிகைத்த வருமானம் ரூபா 142,785,007 தொகை காணப்பட்டது.

2.2 வருமான நிருவாகம்

2.2.1 மதிப்பீட்டு வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

செயலாளரினால் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் படி மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டு தொடர்பாக சமர்ப்பித்திருந்த மதிப்பீட்டு வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

	2024				2023			
வருமான மூலம்	மதிப்பீட்டு வருமானம்	சிட்டையிடப்பட்ட வருமானம்	சேகரிக்கப்பட்ட வருமானம்	திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மொத்த நிலுவை	மதிப்பீட்டு வருமானம்	சிட்டையிடப்பட்ட வருமானம்	சேகரிக்கப்பட்ட வருமானம்	திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மொத்த நிலுவை
	ரூபா 000’	ரூபா 000’	ரூபா 000’	ரூபா 000’	ரூபா 000’	ரூபா 000’	ரூபா 000’	ரூபா 000’
வீதவரி மற்றும் வரி	48,212	43,051	42,210	40,122	49,802	48,635	56,599	38,748
வாடகை	19,028	18,013	21,879	6,089	19,607	20,487	23,936	10,032
அனுமதிப்பத்திரக் கட்டணம்	1,820	1,371	1,361	-	3,203	1,247	1,249	5
ஏனைய வருமானங்கள்	118,396	93,312	88,984	159	117,104	132,480	103,806	50
மொத்தம்	**187,456**	**155,747**	**154,434**	**46,370**	**189,716**	**202,849**	**185,590**	**48,835**

2.2.2 வருமானம் சேகரித்தல் செயலாற்றல்

சபையின் வருமானம் சேகரித்தல் செயலாற்றல் தொடர்பான அவதானிப்புக்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

கணக்காய்வு அவதானிப்பு	சபையின் கருத்துரை	பரிந்துரை
(அ) வீதவரியும் வரியும்		
(i) மீளாய்வாண்டு இறுதித் திகதியில் உள்ளவாறு மொத்த வீதவரி மற்றும் வரி நிலுவைப் பெறுமதி ரூபா 40.12 மில்லியன் தொகையாகக் காணப்பட்டது. 2014 ஆண்டிற்கு முன்னர் இருந்து காணப்படுகின்ற ஜாஎல வாடிவீடு தொடர்பாக 05 வீதவரி அலகுகளில் இருந்து ரூபா 15,216 தொகை நிலுவையாகக்	ஜாஎல வாடிவீடு உரிமை தொடர்பாக நகர அபிவிருத்தி அதிகார சபை மற்றும் ஜாஎல நகர சபைக்கிடையே வழக்கொன்று காணப்படுகின்றமையால் சட்டவரைஞரின் ஆலோசனையின் படி வரி விதிப்பதில் இருந்து தவிர்ந்து	நிலுவை வருமானத்தை அறவீடு செய்வதற்கும் சொத்துக்களின் மூலம் வருமானங்களை அறவீடு செய்வதற்கும் சொத்துக்களின் உரிமையை தீர்த்துக் கொண்டு வீதவரி அறவீடு செய்வதற்கு

காணப்படுவதுடன், 2014 ஆண்டின் போது புதிய கட்டிடம் ஒன்று நிர்மாணிக்கப்பட்டு இந்த வாடிவீடு நடாத்தப்பட்டு வந்த போதிலும் அதற்கான வீதவரி இலக்கமொன்று வழங்கப்பட்டு புதிய வீதவரி பெறுமதி மதிப்பீடொன்றும் மேற்கொண்டிருக்கவில்லை.	இருப்பதற்கு நேரிட்டிருந்தது என.	நடவடிக்கை எடுக்க வேண்டும்.
(ii) மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு காணப்பட்ட ரூபா 40.122 மில்லியனுக்கான மீதியில் 03 வருடங்களுக்கும் 05 இற்கும் இடைப்பட்ட ரூபா 8,750,638 தொகையும், 5 வருடங்களுக்கும் 10 இற்கும் இடைப்பட்ட ரூபா 4,902,922 தொகையும், 10 வருடங்களுக்கு மேற்பட்ட ரூபா 15,120,408 தொகையும் நிலுவை வீதவரி காணப்பட்டது. இந்த நிலுவை மீதிகளை அறவீடு செய்தல் தொடர்பாக நகர சபை கவனம் செலுத்தியிருக்கவில்லை.	இடப் பரிசோதனையொன்று மேற்கொள்ளப்பட்டு அசையும் சொத்துக்களை தடைசெய்து நிலுவை வரி அறவீடு செய்வதற்காக விரைவாக நடவடிக்கை எடுக்கப்படும் என.	நிலுவை வருமானம் விரைவாக அறவீடு செய்தல் மற்றும் பிரதேச சபைச் சட்டத்தின் படி நடவடிக்கை எடுத்தல் மேற்கொள்ளப்பட வேண்டும்.
(iii) மீளாய்வாண்டிற்கான மதிப்பீட்டு களியாட்ட வரி பெறுமதி ரூபா 4,400,000 தொகை எனினும் சிட்டையிடப்பட்ட வருமானம் ரூபா 2,348,771 தொகையாக காணப்பட்டதுடன், சிட்டையிடப்பட்ட வருமானத்தில் ரூபா 888,677 தொகை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.	2024 ஆண்டின் போது விஸ்டா சினிமா கொட்டகை உடைத்து அகற்றப்பட்டிருந்ததுடன் சினமெக்ஸ் சினிமா கொட்டகையின் நிலுவைத் தொகையை விரைவாக அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என.	நிலுவைத் தொகை விரைவாக அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.
(ஆ) மீளாய்வாண்டு இறுதித் திகதியில் உள்ளவாறு வர்த்தக நிலைய வாடகை 1 கீழ் ரூபா 1,470,011 இற்கான நிலுவை வாடகையும் வர்த்தக நிலைய வாடகை 2 இன் கீழ் ரூபா 4,517,081 இற்கான நிலுவை வாடகையும் அறவீடு செய்யப்படாமல் காணப்பட்டது.	இந்த வாடிவீட்டின் உரிமை தொடர்பாக நகர அபிவிருத்தி அதிகார சபை மற்றும் ஜாஎல நகர சபையிடையே வழக்கொன்று காணப்படுவதால் சட்டவரைஞர் அறிவுரையின் படி அறவீடு செய்யாமல் இருப்பதற்கு நேரிட்டுள்ளது என.	நிலுவை வருமானம் அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.
(இ) **அனுமதிப்பத்திரக் கட்டணம்**		
2014 ஆண்டு முதல் ஜாஎல வாடிவீடு நடாத்தப்பட்டிருந்த போதிலும் அதற்காக வர்த்தக அனுமதிப்பத்திரம் ஒன்று வழங்கப்பட்டிருக்கவில்லை.	இந்த வாடிவீட்டின் உரிமை தொடர்பாக நகர அபிவிருத்தி அதிகார சபை மற்றும் ஜாஎல நகர சபையிடையே வழக்கொன்று காணப்படுவதால் சட்டவரைஞர் அறிவுரையின் படி அறவீடு செய்யாமல் இருப்பதற்கு நேரிட்டுள்ளது என.	வியாபாரமொன்று நடாத்திச் செல்வதற்காக வியாபார அனுமதிப்பத்திரம் வழங்கப்பட வேண்டும்.
(ஈ) **ஏனைய வருமானங்கள்**		
மீளாய்வாண்டு மதிப்பீடு செய்யப்பட்ட ஏனைய வருமானங்கள் ரூபா 118,360,000 தொகை காணப்பட்டதெனினும் சிட்டையிடப்பட்ட பெறுமதி ரூபா 93,312,000	நிலையான வைப்புக்களின் வட்டி விகிதாசாரம் குறைவடைதலும் சேதனப் பசளை செயற்களத்தின் வேலைகள் நிறுத்தப்படலும்	மதிப்பீடுகள் சரியாக தயாரிக்கப்பட வேண்டும்.

தொகையாகக் காணப்பட்டமையால் மதிப்பீட்டுப் பெறுமதியில் சிட்டையிடப்படாத பெறுமதி ரூபா 25,084,000 தொகை ஆகிய கூடிய பெறுமதி ஒன்றினைக் கொண்டிருந்தது.	வீதவரி நிலுவைகள் சேகரிப்பதில் பலவீனத் தன்மையின் காரணமாக எழுத்தாணைக் கட்டணம் மற்றும் தண்டப்பணம் அறவீடு செய்ததலில் குறைவடைதலொன்று அதற்கு தாக்கத்தினை ஏற்படுத்தியிருந்தது என.	
(உ) **நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்**		
மாகாண சபையின் செயலாளரிடம் மற்றும் ஏனைய அதிகாரிகளிடம் பெற வேண்டிய 2022 ஆண்டின் ஒக்தோபர் மற்றும் நவம்பர் மாதங்களுக்குரிய நீதிமன்றத் தண்டப் பணமும் 2023 ஆண்டு மே மாதங்களுக்குரிய பெற வேண்டிய முத்திரைக் கட்டண வருமானமும் அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.	தற்போது அட்டவணைகள் தயாரிக்கப்பட்டு வருகின்றது என.	நிலுவைத் தொகையை தாமதமின்றி அறவீடு செய்து ஆக்கபூர்வமாக பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

3. செயற்பாட்டு மீளாய்வு

3.1 முகாமைத்துவத் திறமையின்மை

கணக்காய்வு அவதானிப்பு	சபையின் கருத்துரை	பரிந்துரை
(அ) 2022 ஆண்டின் போது நிறுவப்பட்டிருந்த ரூபா 655,000 தொகைக்கான இருப்புக்கள் மற்றும் களஞ்சிய முகாமைத்துவ மென்பொருள் மற்றும் ரூபா 865,000 தொகைக்கான சம்பள முகாமைத்துவ மென்பொருள் 2025 மார்ச் மாதமளவிலும் செயற்படு நிலைமையில் காணப்படாததினால் அந்த செலவுகள் விளைவற்ற செலவொன்றாக மாறியிருந்தது.	ஊழியர் கடன் மற்றும் தனிப்பட்ட கோப்புக்கள் விடயங்களுக்குரிய மென்பொருள் முறைமை மற்றும் சம்பள முகாமைத்துவ மென்பொருள் முறைமை விரைவாக நாளதுவரை ஆக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என.	பொது மக்களின் பணம் உச்சமட்ட செயற்திறனுடன் பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.
(ஆ) சபைக்குச் சொந்தமான தகனகூடத்திற்காக மத்திய சுற்றாடல் அதிகார சபையினால் சுற்றாடல் பாதுகாப்பு அனுமதிப்பத்திரம் ஒன்று பெற்றுக் கொண்டிருக்கவில்லை.	அனுமதிப்பத்திரம் பெற்றுக் கொள்வதற்கு தேவையான தொடர்நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது என.	சுற்றாடல் அனுமதிப்பத்திரம் பெற்றுக் கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும்.

3.2 செயற்பாட்டுத் திறமையின்மை

கணக்காய்வு அவதானிப்பு	சபையின் கருத்துரை	பரிந்துரை
(அ) சாந்த மரியா வீதியில் வாடகைக்கு கொடுக்கக் கூடிய 22 கடையறைகளில் 14 கடையறைகளுக்காக வாடகையாளர்களுடன்	மீதி நிலுவைத் தொகையை விரைவாக அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என.	கடையறைகள் வாடகைக்கு கொடுக்கும் போது முறைப்பிரகாரம் உடன்படிக்கையொன்று

	உடன்படிக்கைகளுக்கு அனுகுவதற்கு நடவடிக்கை எடுத்திருக்காததுடன் 3 கடையறைகளின் நிலுவை வாடகை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.		அனுகுவதற்கும், நிலுவை வாடகை அறவீடு செய்வதற்கும் நடவடிக்கை எடுக்க வேண்டும்.
(ஆ)	சபையினால் 1986 ஆண்டில் உடன்படிக்கையொன்று மேற்கொள்ளப்படாமல் வழங்கியிருந்த கொழும்பு வீதியில் சிறிய வியாபார நிலைய இலக்கம் 01 கடையறையின் வாடகையாளரினால் துணை வாடகை கொடுக்கப்பட்டிருந்ததுடன், சபையினால் 2008 ஆண்டு துணை வாடகையாளருடன் உடன்படிக்கை மேற்கொள்ளப்பட்டிருந்தது. எனினும் உடன்படிக்கை முடிவுறும் காலப்பகுதி அல்லது மாதாந்த வாடகைத் தொகை உடன்படிக்கையில் குறிப்பிடப்பட்டிருக்கிவல்லை. மேலும் நகர சபை நிதி நிருவாகம் தொடர்பான கணக்கு அலுவல்கள் தொடர்பான விதி இலக்கம் 408(iii) இன் படி மாதாந்த வாடகைக்கான பெறுமதி மதிப்பீடு 2023 ஆண்டின் பின்னர் பெற்றுக் கொண்டிருக்கவில்லை.	இந்த கடையறைகளுக்காக புதிய பெறுமதி மதிப்பீடொன்று பெற்றுத் தரும்படி விலைமதிப்பீட்டு திணைக்களத்திற்கு அறிவிக்கப்பட்டு நிறைவூட்டல் கடிதமும் மேற்கொள்ளப்பட்டிருந்து என.	கடையறைகள் வாடகைக்கு கொடுக்கும் போது முறைப் பிரகாரம் உடன்படிக்கையொன்றிற்கு அனுகுதல் காலரீதியாக வாடகை பெறுமதி மதிப்பீடு செய்தல் மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.
(இ)	நகர சபை நிதி நிருவாகம் தொடர்பான கணக்கு அலுவல்களுக்கு உரிய விதி இலக்கம் 408(iii) இன் படி வாடகைக்கு வழங்கப்படுகின்ற அனைத்து அசையாத ஆதனங்கள் தொடர்பாக உடன்படிக்கை மேற்கொண்ட திகதியில் இருந்து ஒவ்வொரு 03 வருடங்களுக்கும் ஒரு முறை மாதாந்த வாடகை பெறுமதி மதிப்பீடு செய்யப்பட வேண்டிய போதிலும் புகையிரத நிலையப் பாதையிலுள்ள 23 கடையறைகளுக்காக புதிய பெறுமதி மதிப்பீடொன்று மேற்கொள்ளாமல் ஆரம்ப வாடகைத் தொகைக்கே மீண்டும் வாடகைக்கு வழங்குதல் மேற்கொள்ளப்பட்டிருந்தது.	இந்த கடையறைகளுக்காக புதிய பெறுமதி மதிப்பீடொன்று பெற்றுத் தரும்படி விலைமதிப்பீட்டு திணைக்களத்திற்கு அறிவிக்கப்பட்டு நிறைவூட்டல் கடிதமும் மேற்கொள்ளப்பட்டிருந்து என.	நிதி விதியின் படி 3 வருடங்களுக்கு ஒரு முறை புதிய பெறுமதி மதிப்பீடொன்று மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.
(ஈ)	பொதுச் சந்தைக்கு அண்மையின் சிறிய வியாபார நிலையங்களுக்காக கடையறைகள் இடையே 8 கடையறைகள் தொடர்பாக பதிவு செய்யப்பட்ட வாடகையாளர்களின் பெயர் தவிர வாடகை உடன்படிக்கைள் அல்லது உடன்படிக்கை காலப்பகுதியொன்று தொடர்பாக விபரங்கள் சபையிடம் காணப்படவில்லை. அத்துடன் 9	நிலுவை வாடகை விரைவாக அறவீடு செய்யப்பட வேண்டும் என.	வாடகை உடன்படிக்கைகள் நாளதுவரையாக பேணிச் செல்வதற்கும் நிலுவைத் தொகையை விரைவாக அறவீடு செய்வதற்கும் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

கடையறைகளில் இருந்து 2024 திசெம்பர் 31 திகதியளவில் 02 மாதங்களுக்கும் 24 மாதங்களுக்கும் இடைப்பட்ட ரூபா 406,767 இற்கான கடை வாடகை நிலுவை காணப்பட்டது.		
(உ) லேக் சிட்டி காணி துணைப் பகிர்வின் மூலம் ஆதன ஏல விற்பனையாளருக்கு விற்பனை செய்ய முடியாத பகுதிகளாகிய 01 ஏக்கர் 03 ரூட் 0.26 பர்சஸிற்கான குளமொன்று மற்றும் துண்டுகளாக பிரிக்கப்பட்ட பின்னர் மீதியாகக் காணப்பட்ட முக்கோண வடிவ பகுதியொன்று பொது அலுவல்களுக்காக சபைக்கு உரித்தாக்கப்பட்டிருந்தது. சபையினால் இந்த காணிப் பகுதியை அறுதியாக இனங்கண்டிருக்கவில்லை.	குளத்தின் மூலம் அந்த வீட்டுத் திட்டத்தின் வதிவோருக்கு வெள்ள அபாய நிலைமை ஏற்படாமல் தவிர்க்கக் கூடியதாக இருந்தது என.	ஏல விற்பனைக் காணிகள் தொடர்பாக 1986 மார்ச் 10 திகதிய 392/9 இலக்க வர்த்தமானியின் படி செயற்பட வேண்டும்.

3.3 சொத்துக்கள் முகாமைத்துவம்

கணக்காய்வு அவதானிப்பு	சபையின் கருத்துரை	பரிந்துரை
(அ) சபையினால் வழங்கப்பட்டிருந்த பதிவேட்டிலன் படி காணி உறுதி இலக்கம் 8201 இன் கீழ் 01 ஏக்கர் 01 ரூட் 36.4 பர்சஸிற்கான துடெல்ல நவசிகாவத்த காணி தொடர்பாக பௌதீக பரிசோதனையின் போது அந்த காணியின் பகுதியில் 12 வீடுகள் கட்டப்பட்டிருந்த போதிலும் அதற்காக சபையின் அங்கீகாரம் வழங்கப்பட்டிருத்தல் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.	இந்த வீடுகள் நிர்மாணிப்பதற்காக நகர சபையின் அங்கீகாரம் வழங்கப்படவில்லை என.	அங்கீகாரமற்ற நிர்மாண வேலைகளை கட்டுப்படுத்துவதற்காக வேலைத்திட்டமொன்று நிறுவப்பட வேண்டும்.
(ஆ) 2015 ஆண்டில் கொள்வனவு செய்யப்பட்டிருந்த Legal அளவான 151 கடதாசி பக்கட்டுகள் மீளாய்வாண்டு இறுதியளவிலும் களஞ்சியத்தில் விளைவற்றுக் காணப்பட்டது.	சபை வளாகத்தில் நிர்மாணிக்கப்பட்டு வரும் புதிய கட்டிடம் பூர்த்தி செய்யப்பட்ட பின்னர் அனைத்து களஞ்சிய பண்டங்களினதும் பாதுகாப்பு உறுதிப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என.	தேவைப்பாட்டினை சரியாக இனங்கண்டு கொள்வனவு செய்தல் மேற்கொள்ளப்படுதல் மற்றும் இருப்புக்களின் பாதுகாப்பினை பேணி வருவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.
(இ) ஓய்வுபெற்றுள்ள, சேவையை விட்டு சென்றுள்ள, இடமாற்றம் பெற்றிருந்த 27 அலுவலக ஊழியர்கள் 57 நூலகப் புத்தகங்களை திருப்பி ஒப்படைத்திருக்கவில்லை.	இந்த புத்தகங்களின் பெறுமதியை அவர்களிடமிருந்து அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என.	புத்தகங்களை மீண்டும் பெற்றுக் கொள்வதற்காக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.
(ஈ) ரூபா 363,268 தொகை பெறுமதியான நூலகப் புத்தகங்கள் அழிப்பதற்காக பரிந்துரைக்கப்பட்டு அதன் பெறுமதி கணக்குகளிலிருந்து அகற்றப்பட்டிருந்த போதிலும் 2025 மார்ச் 05 திகதியளவிலும் அவை நூலகத்தில் காணப்பட்டது.	சேர்வுப் பதிவேட்டில் அந்த பெறுமதிகளை அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என.	கணிப்பீட்டு சபை பரிந்துரைகளை செயற்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

3.4 மனித வள முகாமைத்துவம்

கணக்காய்வு அவதானிப்பு	சபையின் கருத்துரை	பரிந்துரை
சபையில் 12 பதவிகளுக்கான 27 பதவியணி உத்தியோகத்தர்களின் வெற்றிடங்கள் காணப்பட்டது.	இந்த வெற்றிடங்கள் தொடர்பாக காலாண்டு அறிக்கையின் மூலம் மற்றும் எழுத்துமூலம் உள்ளூராட்சி ஆணையாளர் (மே.மா) இற்கு அறிவுருத்தப்பட்டுள்ளது என.	வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.